## இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 341/2024 | எ.ம.சா. | :1 |
| பெயர் | திரு. மதன்குமார் | | |
| த/பெ. | : திரு. நாராயணன் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 32 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட உதவியாளராக பணியாற்றி வருகிறேன். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். TN 01 AF 5981 வாகனத்தின் காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும், 13-11-2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு எ.ம.சா.ஆ.2 ஆகவும், தபால் ரசீதுகள் எ.ம.சா.ஆ.3 ஆகவும், அறிவிப்பு சார்வாகாமல் திருப்பப்பட்ட கவர் (2 எண்ணிக்கை) எ.ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் TN 01 AF 5981 வாகனம் எங்களது நிறுவனத்தில்

காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராகத்தான் முதல் தகவல் அறிக்கை , இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால்சரிதான். மேற்படி 1ம் எதிர்மனுதாரர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தினார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் TN 01 AF 5981 வாகனம் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்ததால் எங்களது நிறுவனம் தான் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 341/2024 | எ.ம.சா. | : 3 |
| பெயர் | திரு. அண்ணாதுரை | | |
| த/பெ. | : திரு. ஐயன்துரை | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 35 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் ரவி த/பெ. ராமசாமி, வேலம்பாளையம் என்பவரது ஓட்டுநர் உரிமம் குறித்து சாட்சியமளிக்க வேண்டி அழைப்பாணை வரப்பெற்றதன்பேரில் உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். எங்களது அலுவலக ஆவணங்களின்படி மேற்படி நபர் எங்கள் அலுவலகத்தின் மூலமாக ஓட்டுநர் உரிமம் பெறவில்லை. அதற்குண்டான அறிக்கையை தாக்கல் செய்கிறேன். **மேற்படி அறிக்கை Ex.X1.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு நபரின் பெயர், பிறந்த தேதி இருந்தால் மட்டுமே அவர் எங்களது அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளாரா இல்லையா என்று தெரிந்துகொள்ள இயலும் என்றால் சரிதான். பிறந்த தேதியை பயன்படுத்தி அலுவலக ஆவணங்களில்

தேடவில்லை என்றால் சரிதான்.

## நீதிமன்ற கேள்வி

சாதாரணமாக பெயரை மட்டும் பயன்படுத்தி கணினியில் தேடினால் அந்த பெயர்களில் உள்ள நபர்களை அறியலாமா என்றால் சரிதான்.

## இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 341/2024 | எ.ம.சா. | : 2 |
| பெயர் | மருத்துவர் திரு. சதீஷ்குமார் | | |
| த/பெ. | : திரு. கோபால்சாமி | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 44 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் தற்போது கோபி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23-08-2024 அன்று நான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது இரவு 9.30 மணி அளவில் கன்னுச்சாமி வயது 40, த/பெ. ராமன் , அரிஜனகாலனி, கோட்டுப்புள்ளாம்பாளையம், குருமந்தூர், கோபி என்பவர் தான் இருசக்கர வாகனத்தில் சென்றபோது இரவு 9.15 மணிக்கு பழைய வள்ளியாம்பாளையம் பிரிவு அருகே 4 சக்கர வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக கூறி அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருடைய ரத்த அழுத்தம் சீராக இருந்தது. அவருடைய சுவாசத்தில் மதுவாடை இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். இதுகுறித்து விபத்து பதிவேட்டில் பதிவு

செய்தேன். **விபத்து பதிவேடு நகல் எ.ம.சா.ஆ.5.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மேற்படி கன்னுச்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்து என் கைப்பட விபத்து பதிவேடு எழுதினேன் என்றால் சரிதான். மேற்படி நபருக்கு மது வாடை இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் அவர் மதுபோதையில் இருந்தாரா என்று அறிய அவரது ரத்த மாதிரியை பரிசோதனைக்கு எடுக்கவில்லை என்றால் சரிதான். ஒருநபர் இருமலுக்கு மருந்தை எடுத்துக்கொண்டாலும் மதுவாடை வர வாய்ப்புள்ளது என்றால் இல்லை.